## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.109/2020

**16.09.2025**

## P.W.1- மகேந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 3 நபர்கள் என்றால் சரிதான். தெய்வேந்திரன், மகேந்திரன், மூவேந்திரன் ஆவோம். எனது அம்மா பெயர் கருப்பாயி அம்மாள் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் ராசுத்தேவர் என்றால் சரிதான். எனது அம்மா பெயர் ரா.கருப்பாயி என்று போடுவது தான் வழக்கம் என்றால் சரிதான். எங்களது குடும்பத்திற்கு பூர்வீக ஊர் குருவித்துறை என்றால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்த நாள்முதல் கோவில்பட்டியில் தான் வசித்து வருகிறோம். 1993 வருடத்திற்கு முன்பு எங்கு குடியிருந்தோம் என்றால் கோவில்பட்டியில் ஒத்தவீட்டில் வாடகைக்கு இருந்தோம். எனது சகோதரர் தெய்வேந்திரனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை ராசுத்தேவரின் அப்பா பெயர் பின்னத்தேவர் ஆகும். எனது தகப்பனார் ராசுத்தேவர் மீது குருவித்துறையில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு பூர்வீக ஊர் குருவித்துறை என்றாலும், அங்கு கொலை நடந்ததால் அங்கிருந்து அடைக்கலம் தேடி வந்தபோது பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர்கள் தாவா சொத்தில் அடைக்கலம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அந்த ஊரில் விவசாய நிலங்கள் நிறைய உள்ளன என்றால் தெரியாது. பிரதிவாதி பால்பண்ணை வைத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி ஊரில் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 2020ல் அவர் எங்களை வெளியேற்ற முயற்சித்தார். அப்போது தான் அவர் ஊராட்சி மன்ற தலைவர் ஆனார். எனது அப்பா விவசாயம் செய்து வந்தார், ஆடு, மாடுகளை வளர்தார், கூலி வேலை செய்து வந்தார். எனது அம்மாவும் எனது அப்பாவுக்கு ஒத்தாசையாக கூலி வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். நானும், எனது சகோதரரும் விவசாய கூலி வேலை செய்து வருகிறோம். எனது தாயார் உயிருடன் உள்ளார். எனது தாயார் எப்போது தாவா சொத்தை பிரித்து

கொடுத்தார் என்றால் 2008ல் அப்பா இறந்தவுடன் பிரித்து கொடுத்தார். மேற்படி ஊரில் எங்களுக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து இல்லை. எனது சகோதரருக்கு வேறு சொத்து உள்ளதா என்றால் தெரியாது. தாவா சொத்தில் எந்த வருடம் வீடு கட்டப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை, கலைஞர் பசுமைவீடு திட்டத்தில் கட்டப்பட்டது. மேற்படி கலைஞர் பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டுவதற்கு எனது தம்பி மூவேந்திரன் பெயரில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி வீட்டின் மின்இணைப்பு எனது அம்மா பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 மின்இணைப்பு ரசீது எனது தாயாருக்கு வழங்கப்பட்டது அல்ல, வேறு வீட்டிற்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வீட்டு வரி ரசீது என் பெயரிலும், எனது தம்பி பெயரிலும் உள்ளது. வா.சா.ஆ.5 வீட்டு வரி ரசீது எனது தாயார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2016ம் வருடம் மேற்படி கதவு எண்ணிற்கு எனது பெயரில் வரி ரசீது உள்ளது என்றால் சரிதான். 2018ம் வருடம் எனது பெயரில் போடப்பட்ட வா.சா.ஆ.7 வீட்டு வரி ரசீதில் கதவு எண் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. 2020ம் வருடம் எனது சகோதரர் பெயரில் போடப்பட்ட வா.சா.ஆ.8 வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் சரிதான். இரண்டு வீடுகள் உள்ளன. ஒன்று எனது பெயரிலும், மற்றொன்று எனது சகோதரர் பெயரிலும் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா எந்த இடத்திற்குரியது என்று எனக்கு தெரியாது. 2020ம் வருடம் தாவா சொத்தை தவிர வேறு சொத்தான விக்கிரமங்கலம் கிராம சர்வே எண்.60/9சி யில் கட்டுப்பட்ட சொத்தை எனக்கும், எனது சகோதரருக்கும் செட்டில்மென்ட் ஆவணங்கள் (ஆவண எண்கள்.2308/2020 மற்றும் 2309/2020) சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கான பட்டா எண்.3510 எனது சகோதரர் பெயரிலும், பட்டா எண்.3515 எனது பெயரிலும் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண்.60/9சி யில் உள்ள சொத்து எங்களுக்கு பூர்வீக சொத்தா என்றால் எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்தாகும். தேதி, வருடம் ஞாபகமில்லை. வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள், மின்இணைப்பு ரசீதுகள் சர்வே எண்.60/9சி க்குரியது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். கலைஞர் வீடு திட்டத்தில் வீடு கட்டுவதற்கு மானியம் கிடைக்க வேண்டும் என்றால் எனது பெயரிலும், எனது சகோதரர்

பெயரிலும் பட்டா இருக்க வேண்டும் என்பதால் மேற்படி சா்வே எண்.60-9சி யில் உள்ள சொத்தில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின்இணைப்பு ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தில் விவசாய கூலிகளுக்கு தங்குவதற்கு குடிசை வீடு வைத்திருப்பாா்கள் என்றால் இல்லை. நானும், எனது குடும்பத்தாா்களும் பிரதிவாதியிடம் சில காலம் வேலை பாா்த்ததால் தாவா சொத்தில் குடியிருக்க பிரதிவாதியின் அனுமதியின் பேரில் சில காலம் இருந்துவிட்டு தற்போது உரிமை கொண்டாடுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி பிரதிவாதியின் தென்னை தோப்பு உள்ளது என்றால் சரிதான். தென்னந்தோப்பின் நடு பகுதியில் தாவா வீடு உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாா் ராசுத்தேவா் காலத்திலிருந்து பிரதிவாதியின் தோப்பில் வேலை பாா்த்து விட்டு தோப்பில் வேலைக்காக குடியமா்த்திய பிறகு தாவா சொத்தை போலியான ஆவணங்கள் மூலம் உரிமை கொண்டாடுவது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. எனது அம்மா வாய்மொழியாக கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சந்தானம் பிரதிவாதியின் சித்தப்பா என்றால் சரிதான். பிரதிவாதியின் அனுமதியின் பேரில் தாவா சொத்தில குடியிருப்பதற்கு வாய்மொழியாக கிரையம் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.16 17:27:25 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.